# கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் தொலைக்காட்சித் தமிழ்ச் செய்திகள் ஓர் ஆய்வு
# A Study of RTM TV Tamil News during the Covid-19 Pandemic


சந்திரகலா ஐயப்பன் / Chandrakala Yoepan[1]

முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம் / Dr.Manimaran Subramaniam[2]



Date of submission: 2022-10-04
Date of acceptance: 2022-11-02
Date of Publication: 2022-12-28


Corresponding author's Name:
Dr.Manimaran Subramaniam
Email: manimaran23@um.edu.my



## Abstract

The Covid-19 pandemic that originated in Wuhan, China, has spread to many countries and caused an unprecedented impact. Although the severity of the Covid-19 pandemic has decreased globally, the infection has still not been completely eradicated. The World Health Organization considers it essential to bring information to the public about this disease, which is often mutated. In this case, the government of our country has also been busy providing correct information to the people. The Malaysian Ministry of Health, in collaboration with other key organizations, disseminated information to the public promptly in a variety of formats. Thus, RTM has taken the responsibility of being the official media for Covid- 19 Pandemic (Saifuddin, 2020). Several types of news were broadcast exclusively during this period, and this article examines the role of RTM TV Tamil news in disseminating the Covid- 19 related information among Malaysian Indians. This research paper has been prepared by involving the regular viewers of RTM TV Tamil news. Data for this study were collected using the snowball method and analyzed using SPSS software. Based on this research, it is clear that although information related to the Covid-19 outbreak is broadcasted through RTM TV Tamil news on television and social media, the primary choice of Malaysian Indians is television. However, in this modern era of the 4.0 industrial revolution, few Malaysian Indians watch RTM TV Tamil news via social media.



**Key Words:** Covid-19 Pandemic, TV Tamil News, Malaysian Indians, RTM, Propagate


### முன்னுரை

முதன் முதலாக சீனா வூஹான் மாகாணத்தில் *2019*ஆம் ஆண்டில் உருவான கோவிட் *19* தொற்று உலக நாடுகளுக்குப் பரவி கொள்ளை நோயாக உருவானது. இந்நோய் உலகளவில் அதி விரைவாகப் பரவி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதால், *2020*ஆம் ஆண்டு மார்ச்சு மாதம், இஃது ஒரு கொள்ளை நோய் எனவும், உலக மக்களை விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் உலகச் சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்தது (BBC, 2020).


[1]The author is a research student in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. chandrakalayoepan@gmail.com

[2]The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. manimaran23@um.edu.my

இந்தப் பெருந்தொற்றிலிருந்து மக்களைக் காக்க, மலேசிய அரசாங்கமும் பல்வேறு உத்திகளை மேற்கொண்டது. 2020 ஜனவரி 25ம் நாள் இந்தக் கொள்ளை நோய் மலேசியாவில் முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் பல்வேறு காரணங்களால் தொற்று எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. இந்தப் பெருந்தொற்றிலிருந்து மக்களைத் தற்காக்க மலேசிய அரசாங்கம் 2020 மார்ச்சு 18ம் நாள் முதல் நடமாட்டக் கட்டுப்பாட்டு உத்தரவை (PKP 1.0) விதித்தது. ஆனால் 2020 ஜனவரி மாதம் முதற்கொண்டே நமது அரசாங்கம், இந்தக் கொள்ளை நோய் பற்றியத் தகவல்களை அவ்வப்போது மக்களுக்குக் கொண்டு சேர்த்ததும் குறிப்பிடத்தக்கது. கோவிட் 19 பெருந்தொற்றின் சீற்றம் இன்றைய நிலையில் குறைந்திருந்தாலும், தொற்றின் தாக்கம் இன்றளவும் தொடர்கிறது. (Anuar, 2022).

மூச்சுத் திணறல், காய்ச்சல், வறட்டு இருமல் என பல்வகையான அறிகுறிகளோடும், அறிகுறிகள் இல்லாமலும் கோவிட் 19 தொற்று கண்டவர்கள் காணப்படுகின்றனர். கோவிட் 19 பெருந்தொற்றானது உடல் ஆரோக்கியம் மட்டுமல்லாமல் அன்றாட வாழ்க்கையிலும் பெருமளவு எதிர்மறைத் தாக்கத்தை உண்டாக்கியது. இதுவரை உலகம் எதிர்கொண்டிராத நிலையை சந்தித்த நிலையில், மலேசியாவிலும் அதன் தாக்கம் தீவிரமடைந்தது.

தொற்று எண்ணிக்கை அதிகரிப்பு, அரசியல் நிலைத்தன்மையின்மை, அங்கீகரிக்கப்படாத தகவல்களின் படையெடுப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், வெள்ளப் பேரிடர் என சொல்லிலடங்காத சோதனைகளை நாடு எதிர்கொண்டது. இந்நிலையில், மலேசிய சுகாதார அமைச்சு (Kementerian Kesihatan Malaysia-KKM), தகவல் தொடர்பு பல்லூடக அமைச்சு (Kementerian Komunikasi dan Multimedia - KKMM), மலேசிய தேசிய பாதுகாப்பு மன்றம் (Majlis Keselamatan Negara-MKN), நெருக்கடி தயார்நிலை விரைவு நடவடிக்கை மையம் (Pusat Kesiapsagaan dan Tindak Cepat KrisisCPRC), தேசிய பேரிடர் மேலாண்மை வாரியம் (Agensi Pengurusan Bencana Negara-NADMA) உள்ளிட்ட முக்கிய அமைப்புகளும் அரசு நிறுவனங்களும் இணைந்து மக்களுக்குத் தேவையான உதவிகளை நல்கின. அதோடு, கோவிட் 19 பெருந்தொற்று தொடர்பான பல தகவல்களை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் முயற்சிகளையும் மேற்கொண்டன.

அந்த முயற்சிகளில் முதலானதும், தலையாயதுமானது, பொது சுகாதாரத் தகவலியல் வழி அங்கீகரிக்கப்பட்ட முக்கியத் தகவல்களை ஊடகங்களின் வழி விரைவாகவும், துல்லியமாகவும் மக்களுக்கு வழங்குவது ஆகும். ஆக, மலேசிய அரசாங்கம், கோவிட் 19 குறித்த முக்கியத் தகவல்களை வழங்கக் கோரி அரசுத் தகவல் ஊடகங்களை வலியுறுத்தியது. 76 ஆண்டுகள் நெடிய வரலாற்றைக் கொண்ட, அரசாங்க ஊடகமான ஆர்.டி.எம் இதற்கு முக்கியப் பங்காற்றியது என்பதை மறுப்பதற்கில்லை. ஆஸ்ட்ரோ, பெர்னாமா போன்ற அலைவரிசைகளிலும் தமிழ்ச் செய்திகள் ஒவ்வொருநாளும் ஒளிபரப்பப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆக கோவிட்19 பெருந்தொற்று போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் விழிப்புடன் இருக்கவும் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், புதிய வாழ்க்கைச் சூழலை எதிர்கொள்ளவும் தமிழ்ச் செய்திகள் துணை செய்கின்றன.

## ஆய்வுப் பின்னணி

கோவிட் 19 கொள்ளை நோயானது மக்களின் இயல்பு வாழ்க்கையை மாற்றியமைத்தது. பொது முடக்கக் காலகட்டத்தில் முகக் கவசம் அணிதல், கைகளை அடிக்கடிக் கழுவுதல், தூர இடைவெளியைக் கடைப்பிடித்தல், மனிதர்கள் அதிகம் கூடும் வணிக வளாகங்கள், திரையரங்குகள், பூங்காக்கள் மட்டுமல்லாது கல்விக் கூடங்களும், வேலையிடங்களும், விமான நிலையங்களும் உடனடியாக மூட உத்தரவு, தடுப்பூசி விழிப்புணர்வு, சமய, பண்பாட்டு, அரசியல் நிகழ்ச்சிகள் முடக்கம், உள்ளூர், வெளியூர் மாநிலங்களுக்குச் செல்லத் தடை, வீட்டிலிருந்தபடியே

இயங்கலை வழி மாணவர்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், முக்கியத் துறைகளைத் தவிர்த்துப் பிற தொழிலில் ஈடுபடுபவர்களும் வீட்டிலேயே இருந்து வேலை செய்ய வேண்டிய கட்டாயம், பல தொழில் துறைகள் அடைப்பு, என பல புதிய இயல்புகளை, வாழ்க்கை நடைமுறையாகக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தில் மலேசிய மக்கள் இருந்தனர். அரசாங்கம் விதித்த புதிய இயல்புகளைக் கடைப்பிடிக்காதவர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. இதன் விளைவு, உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோவிட் 19 பெருந்தொற்றைக் கட்டுப்படுத்திய சிறந்த ஐந்து நாடுகளில், மலேசியாவும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (Ismail, 2020). இருந்தும், கோவிட் 19 கொள்ளை நோயின் முதல், இரண்டாம் அலைகளை வெற்றிகரமாகக் கடந்து சென்ற நமது நாடு, மூன்றாம் அலையைக் கடப்பதில் பெருஞ் சிரமத்தை எதிர்நோக்கியது. மக்களின் உயிரைக் காக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தாலும், பொருளாதார வீழ்ச்சி, அரசியல் நெருக்கடி, ஆட்சி மாற்றம் என பல இக்கட்டான சூழ்நிலைகளில் சிக்கியிருந்தது. (Alzahrin, 2020) Berita Harian. நம் நாடு தற்போது அச்சூழ்நிலையிலிருந்து மீண்டு வந்தாலும், கோவிட் 19 பெருந்தொற்றின் தாக்கம் இன்றளவும் தொடர்கிறது.

இந்தக் கோவிட்19 தொற்று நோய், உடல் சுகாதாரம் மட்டுமின்றி, மனிதர்களின் செயல்பாடுகள் மற்றும் சிந்தனையை முடக்கக் கூடிய ஒரு சுகாதாரப் பிரச்சனையும் ஆகும். ஆனால், கோவிட் 19 பெருந்தொற்று நமது நாடு எதிர் கொள்ளும் முதல் தொற்று நோய் அன்று. 1980 முதல் 1990 வரை பல்வகையான தொற்று நோய்களைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் பல்வேறு முயற்சிகளை மலேசிய அரசாங்கம் மேற்கொண்டது. (Fatan, 2005). நீப்பா வைரஸ், டெங்கி, சிக்குங்குன்யா, மெர்ஸ்கொவி, சார்ஸ் போன்ற தொற்று நோய்களும் நமது நாட்டைத் தாக்கியிருக்கின்றன. இருந்த போதும், இந்தக் கோவிட்19 கொள்ளை நோய் நமது நாட்டிற்குப் பெரிய சவாலை உருவாக்கியது. ஏனென்றால் இந்தத் தொற்றால் ஏற்பட்டச் சேதங்களும் உயிரிழப்புகளும் ஏராளம்.

தற்போது நமது நாடு கோவிட் 19 பெருந்தொற்று நிலையிலிருந்து குறும்பரவல் நிலைக்கு மாறிவிட்டாலும், தொற்றின் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுபடவில்லை. ஏனென்றால் அடிக்கடி மரபணு மாற்றம் காணும் இந்தத் தொற்று பல திரிபுகளில் இன்றளவும் மக்களைத் தாக்குகின்றது. ஆகவே இந்நிலையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை களையும், சுகாதாரத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவது அவசியமாகிறது. அதற்கு மக்கள் ஒவ்வொருவரின் பங்கும் அவசியம். ஏனெனில் பல வகையில் உருமாற்றம் காணும் கோவிட் 19 தொற்று தொடர்பாகவும், அதையொட்டிய வாழ்வியல் வழிகாட்டலுக்கும், முக்கியத் தகவல்களையும், தரவுகளையும், விழிப்புணர்வையும் மக்களுக்கு உடனடியாகக் கொண்டு சேர்ப்பது அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பு. இதனை அடிப்படையாக வைத்துதான் மக்கள் கோவிட் 19 தொடர்பான முக்கியத் தகவல்களைப் பெற்று கொள்ள இயலும்.

பல பரிமாணங்களில் கோவிட் 19 தொடர்பான தகவல்கள் பகிரப்பட்டாலும் தகவல்களைப் பரப்புவதற்கும், கருத்துகளை உருவாக்குவதற்கும், வழங்கப்பட்ட தகவல் பற்றிய பொது அணுகுமுறையை எடுத்துக்காட்டவும், சிறந்த வெகுஜன ஊடகமாகத் தொலைக்காட்சி திகழ்கின்றது (Folkerts, Lacy & Larabee, 2008). கோவிட் 19 கொள்ளை நோயின் பாதிப்பு மிக உச்சத்தில் இருந்த காலக்கட்டத்தில் பல்வகைத் திரிபு கண்டு வரும் கோவிட் 19 தொற்று நோயின் அறிகுறிகளைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பது, நோய் தடுப்பு, அது தொடர்பான மருந்து, உணவு முறை, சாமானிய மக்களின் ஆரோக்கியம், நடமாட்டக் கட்டுப்பாட்டு உத்தரவுகள், அரசு உதவி சார்ந்த தகவல்கள் என அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியச் செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் தொலைக்காட்சிச் செய்திகள் முக்கியப் பங்கு வகித்துள்ளன. (ஹேமந்த் குமார், 2020). இந்நிலையில் மலேசிய அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ ஊடகமான ஆர்.டி.எம், கோவிட்19 தொற்று

தொடர்பான தகவல்களை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் முதலிடம் வகிக்கிறது. மலாய், தமிழ், ஆங்கிலம், மெண்டரின், 6 மொழிகளில் ஆர்.டி எம் செய்திகள் நாடு முழுவதும் ஒளிபரப்பப்படுகின்றன. (Portal RTM, 2022).

நம் நாட்டில், இந்தியர்களுக்கான செய்திகள் நாளிதழ், தொலைக்காட்சி, வானொலி, சமுக வலைத்தளங்கள் என பல மூலங்களின் வழி தமிழ் மொழியியேலே தகவல்கள் பகிரப்பட்டாலும், கோவிட் 19 தொற்றுக்கான அதிகாரப்பூர்வ முதன்மை ஊடகம் ஆர்.டி.எம் தொலைக்காட்சி தமிழ்ச் செய்தி ஆகும். ஆர்.டி.எம் தொலைக்காட்சியில் மொத்தம் 6 மொழிகளில் செய்திகள் ஒளிபரப்பப்படுகின்றன. அவற்றில் தமிழ்ச் செய்தியும் பிரதான நேரத்தில் ஒளிபரப்பப்டுவது யாவரும் அறிந்த ஒன்று. ஒவ்வொரு நாள் இரவும் 7.30 மணியிலிருந்து 8.00 மணி வரை 30 நிமிடங்களுக்கு ஒளிபரப்பப்படும் ஆர்.டி.எம் தொலைக்காட்சி தமிழ்ச் செய்தி, கோவிட் 19 தொற்று காலகட்டத்தில் ஆற்றிய பங்கு அளப்பரியது. (வசந்தம், 2021)

## முந்தைய ஆய்வு

“Audience’s Perception and Engagement with Malaysian Public Broadcaster, Radio Television Malaysia’s (RTM) Prime News” எனும் தலைப்பில் ஆர்.டி.எம் தொலைக்காட்சி செய்தி பற்றி மக்கள் கொண்டுள்ள கருத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 1946ல் ‘வர்தா பெரித்தா’ என்று துவங்கப்பட்ட பிரதான தொலைக்காட்சி செய்தி நேஷனல் 8 என பெயர் மாற்றம் கண்டு ஒவ்வொரு நாளும் இரவு 8க்கு ஒளிபரப்பப்படுகிறது. இது நான்காம் தொழில் புரட்சி காலகட்டமாதலால் தொலைக்காட்சி வழி செய்திகளை அறிந்து கொள்ளும் அதே வேளை மக்கள் சமூக வலைத்தளங்கள் வழியாகவும் தேவையான செய்திகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இருந்தாலும், நம்பகத்தன்மையான தகவல்களுக்கு மக்கள் தொலைக்காட்சி செய்திகளையே சார்ந்திருக்கின்றனர் என்பதை இந்த ஆய்வு காட்டுகிறது.

“Relationship Between COVID-19 Information Sources and Attitudes in Battling the Pandemic Among the Malaysian Public: Cross-Sectional Survey Study” என்ற தலைப்பில் கோவிட் 19 கொள்ளை நோயை எதிர்த்துப் போராட மக்களின் சிந்தனைப் போக்குக்கும் தகவல் மூலங்களுக்கு உள்ள தொடர்பு பற்றி ஆராயப்பட்டது. இந்த ஆய்வுக் கட்டுரையில், நோய்த் தொற்று காலகட்டத்தில் மலேசியர்கள் அதிகாரப் பூர்வ ஊடகங்களையே அதிகமாக நம்புவதாக இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது சமூக வலைத்தலங்கள், யூடியூப், பிறரிடமிருந்து வாய் மொழியாகப் பகிரப்படும் தகவல்களை நம்புபவர்களைக் காட்டிலும் மலேசிய சுகாதார அமைச்சு, தொலைக்காட்சி செய்திகள், தேசிய பாதுகாப்பு மன்றம் ஆகிய அதிகாரப்பூர்வத் தகவல்களை முழுமையாக ஏற்றுக்கொள்பவர்களே இந்தத் தொற்றை எதிர்கொள்ள முடியும் என நம்புகின்றனர். (Emma Mohamad, Jen Sern Tham, Suffian Hadi Ayub, 2020)

மேலும், இந்தியாவைச் சேர்ந்த 2 ஆராய்ச்சியாளர்கள், கோவிட் 19 தொடர்பான தொலைக்காட்சி செய்திகளை ஆராய்ந்திருக்கிறார்கள். கோவிட் 19 தொற்று தொடர்பான தொலைக்காட்சி செய்திகள் மக்களை அதிகம் ஈர்ப்பதாகவும், மக்களது அன்றாட வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறான போதிலும் இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கமும், பொது சுகாதாரத் தகவலியல் அமைப்புகளும் அதிக அக்கறை காட்டவில்லை என்கிற ஆதங்கத்தையும் தங்களது ஆய்வு வழி மெய்ப்பித்திருக்கின்றனர். அதோடு இந்த ஆய்வில் கோவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்த தொலைக்காட்சி செய்திகளின் பங்கு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

## ஆய்வுச் சிக்கல்

கோவிட் 19 விழிப்புணர்வு குறித்தத் தகவல்கள், தமிழ் மற்றும் மெண்டரின் செய்திகளில் மேம்படுத்தப்பட வேண்டும் என தகவல் தொடர்பு பல்லூடக முன்னாள் அமைச்சர் டத்தோ ஸ்ரீ சைபுடின் அப்துல்லா

கருதுவதாகச் செய்தி வெளியிட்டார். நாட்டின் பிரதான தொலைக்காட்சிச் செய்தியை ஒப்பிடும் போது, தமிழ் மற்றும் மெண்டரின் செய்திகளில் வழங்கப்படும் கோவிட் 19 தகவல்களில் இடைவெளி இருப்பதாக அவர் தெரிவித்தார். (ஆஸ்ட்ரோ, நவம்பர் 2020).

அதோடு நமது நாட்டில் அரசாங்கத் தொலைக்காட்சி ஊடகங்களில் மட்டும் அல்லாது தனியார் ஊடகங்களிலும் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளும் செய்திகளும் பெரும்பாலும் தேசிய மொழியிலேயே ஒளிபரப்பப்படுகிறது என ஆய்வாளர்கள் விளக்கியிருக்கின்றனர். (Fauziah Hasan, Zulkiple A.Ghani, Rosidayu Sabran, Suria Ani, 2015).

அதோடு, மலேசியாவில் கோவிட் 19 கொள்ளை நோயை உட்படுத்திய ஊடகங்கள் தொடர்பான ஆய்வுகள் மின்னியல் தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தாலும், அவற்றில் மலேசிய இந்தியர்களுக்காக, தொலைக்காட்சித் தமிழ்ச் செய்திகளில் கோவிட் 19 கொள்ளை நோய் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

## ஆய்வின் முக்கியத்துவம்

கோவிட் 19 கொள்ளை நோய் தொடர்பான முக்கியத் தகவல்கள் தாய் மொழியிலேயே பகிரப்பட வேண்டியதன் அவசியத்தை தகவல் டத்தோ சைஃபுடின் அப்துல்லா, பல்லூடக அமைச்சர் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது (Berita RTM, Julai, 2020). தாய் மொழியின் வழி பகிரப்படும் செய்திகள் மக்களை எளிதில் சென்றடைவதுடன், தொற்றைத் தடுக்கும் சிறந்ததொரு வழியாகவும் அமைகிறது. பல ஆய்வாளர்களும் தங்களது ஆராய்ச்சியில், சிறுபான்மையினத்தவர்களுக்குச் சுகாதார தகவல்கள் அந்தந்த் தாய் மொழியிலேயே தகவல்கள் வழங்கப்படுவதன் முக்கியத்துவத்தை விளக்கியிருக்கின்றனர்.

மலேசியாவில், 76 ஆண்டு காலமாய் ஆர்.டி.எம் எனப்படும் மலேசிய வானொலி, தொலைக்காட்சி நிறுவனத்தின் வழி தமிழ்ச் செய்திகள் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.. இந்நிலையில், கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில், ஆர்.டி.எம் தொலைக்காட்சி தமிழ்ச் செய்திகளின் ஆளுமையை ஆராய்வதோடு, இந்நாட்டில் இந்தியர்கள் விரும்பிப் பார்க்கும் ஆர்.டி.எம் தமிழ்த் தொலைக்காட்சி செய்திகளின் மூலத்தைக் கண்டறிய இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வு முறைமை

இந்த ஆய்வுக் கட்டுரைக்கு Agenda Setting (அஜெண்டா செட்டிங்) கோட்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது. தகவல் ஊடகங்கள் எவ்வாறு பார்வையாளர்களை ஈர்க்கின்றன என்பதை விளக்க இந்த முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறை எவ்வாறான முக்கியச் செய்திகள் வழங்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்க உதவுகிறது. (Little John, 1996). இந்த முறைமையானது 3 முக்கியக் கூறுகளை உள்ளடக்கியுள்ளது. இதன் முதலாவது கூறு, செய்தித் தொகுப்பாளர்கள் உருவாக்கும் ஒரு குறிப்பிட்ட பொருண்மைக்கான ஊடகக் கொள்கை வரையரை ஆகும். இரண்டாவது, குறிப்பிட்ட பொருண்மைக்கான ஊடகக் கொள்கை வரையரை ஏதேனும் ஒரு வகையில் பொது மக்களின் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்தி, அந்தப் பொருண்மையின் முக்கியத்துவத்தை வெகுஜன மக்களிடையே அறிய வைக்கும். இதுவே வெகுஜன மக்களுக்கான தகவல் ஊடகச் செயல்திட்டம் ஆகும். பொதுமக்களிடையே சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தும் அந்த வெகுஜன செயல்திட்டம், அரசாங்கம் வகுக்கும் கொள்கைப் பகுப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆக சுருங்கக் கூறின், செய்தித் துறையில் நிர்ணயிக்கப்படும் குறிப்பிட்ட ஊடகக் கொள்கை வரையறையானது பொது மக்களின் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களது வாழ்வியலில் பிரதிபலிக்கும் அதே வேளை, அதன் முக்கியத்துவம் அரசாங்கம் வகுக்கும் கொள்கையிலும் பிரதிபலிக்கும். (Abdullah & Rahman, 2020).

அந்த வகையில், இந்தக் கோவிட் 19 தொற்று காலகட்டத்தில் ஆர்.டிஎம் தொலைக்காட்சி தமிழ்ச் செய்திப் பிரிவு வகுத்தச் செயல் திட்டக் கொள்கை மலேசிய

இந்தியர்களிடையே எத்தகைய தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை இந்த ஆய்வு முறைமை புலப்படுத்துகிறது.

## தரவுப் பகுப்பாய்வு

ஆராய்ச்சி முறையானது ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்படும, அவை கட்டமைக்கப்பட்ட கேள்வி ஆய்வுகள் சார்ந்த அளவு முறைகள், மாதிரி முறைகள், ஆராய்ச்சிக் கருவிகள், தரவு பகுப்பாய்வு, தரவு சேகரிப்பு ஆகியவை. (Jusang, Akmar & Mohd, 2018).

இந்த ஆய்வுக் கட்டுரையை உருவாக்குவதற்கு முன், தொலைக்காட்சி செய்திகளின் முக்கியத்துவம், கோவிட் 19 பெருந்தொற்று தொடர்பான பொது சுகாதாரத் தொடர்பியல், ஆர்.டி.எம் தொலைக்காட்சி செய்திகள், தொற்று நோய்கள், தாய்மொழியில் பொது சுகாதாரத் தொடர்பியல் தொடர்பான முந்தைய ஆய்வுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பின்னர் ஆய்வுக்கான நோக்கங்களையும், ஆய்வுக் கட்டமைப்பையும் மையமாக வைத்து, வினா நிரல்கள் உருவாக்கப்பட்டன. இந்த வினா நிரல்கள் பனிப்பந்து முறையில் சமூக வலைத்தளங்களின் வழி பகிரப்பட்டன. இந்த முறையில், சுய விபரங்கள் இரகசியமானது என்பதால், எந்த விதத் தயக்கமுமின்றி, 242 பங்கேற்பாளர்கள் பதிலளித்தனர்.

கூகள் பாரத்தில் பகிரப்பட்ட மொத்தம் 53 கேள்விகளை உட்படுத்திய வினா நிரல்கள், 3 பகுதிகளாகப் பின் வரும் வகையில் பிரிக்கப்பட்டன:

| | |
|---|---|
| பகுதி A | பதிலளிப்பவர்களின் புள்ளி விவரங்களை உள்ளடக்கிய 8 கேள்விகள். |
| பகுதி B | கோவிட் 19 பெருந்தொற்று தொடர்பான விழிப்புணர்வ உள்ளடக்கிய தகவல் அறிவு(Knowledge), மனப் போக்கு(Attitude), புத்தியல்பு. நடைமுறை(Practice) ஆகிய 20 கேள்விகள் |
| பகுதி C | ஆர்.டி.எம் தொலைக்காட்சி தமிழ்ச் செய்திகளின் ஆளுமையை உட்படுத்திய 24 கேள்விகள். |

பகுதி B முதல் பகுதி சி வரையிலான அனைத்து கேள்விகளும் ‘லைக்கர்ட்’ அளவுகோலின்படி (Likert scale) மதிப்பிடப்பட்டன. ஒவ்வொரு கேள்விக்கும் 1 முதல் 5 வரையிலான அளவுகோல் எண் கொடுக்கப்பட்டிருந்தது. இவற்றுக்கான அளவுகோல் ‘உடன்படவில்லை’(1), ‘உடன்படவில்லை’(2), ‘உறுதியாக இல்லை’(3), ‘ஒப்புக்கொள்கிறேன்’(4) முழுமையாக ஒப்புக்கொள்கிறேன்’(5) ஆகியன. ”SPSS (Statistical Package Of Social Science)” எனப்படும் புள்ளி விவரத் தொகுப்பு வழிமுறையின் உதவியுடன் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இதனுடன், சார்பு மாறிகள் சார்பற்ற மாறிகள் இடையே உள்ள தொடர்பு கருத்தியல் கட்டமைப்பின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டது.

## ஆய்வு முடிவு

இந்த ஆய்வில் தொலைக்காட்சித் தமிழ்ச் செய்திகளை தினமும் பார்க்கும் வழக்கம் கொண்ட 242 பேர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்களில் (54.1%) ஆண்கள் மற்றும் (45.9%) பெண்கள். இந்த ஆய்வில் பங்கெடுத்தவர்கள் 18 வயது முதல் 70 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர். பதிலளித்தவர்களில் மொத்த எண்ணிக்கையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 83.9% திருமணமானவர்கள், மற்ற 13.6% பேர் திருமணமாகாதவர்கள். இருப்பிடத்தின் அடிப்படையில் பார்த்தால், அவர்களில் பெரும்பாலோர் 82.2% நகரத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் 17.8% கிராமப்புறத்தைச் சார்ந்தவர்கள். இவர்களில் பெரும்பான்மையினரின் கல்வி நிலை இளங்கலை மற்றும் அதற்கு மேல் உள்ளது. பதிலளித்தவர்களில் அதிகமானோர் 45.6% இளங்கலைப் பட்டக் கல்வித் தகுதியைக் கொண்டவர்கள். 24.8% முதுகலை அல்லது முனைவர் பட்டம் பெற்றவர்கள் மற்றும் 14% பேர் சான்றிதழ் அல்லது டிப்ளமோ கல்வித்

தகுதியைக் கொண்டவர்கள். மிக குறைவான எண்ணிக்கையில் 14.5% உள்ளவர்கள் மேல்நிலைப் பள்ளி வரை கற்றவர்கள் ஆவர். ஏனைய 1.2% ஆரம்பக்கல்வி பெற்றவர்கள்.

இந்த ஆய்வில், பதிலளித்தவர்களில் அதிகமானவர்கள் பொதுச் சேவைத் துறையில் பணிபுரிபவர்களாக உள்ளனர். அரசாங்கத்தில் பணிபுரிபவர்கள் 61.4%, தனியார் துறையில் பணிபுரிபவர்களின் சதவிகிதம் 13.9% மற்றும் சுயதொழில் செய்பவர்கள் 10.9% ஆவர்.

ஆர்.டி.எம் செய்திகள் ஒளிபரப்படும் தகவல் ஊடக மூலங்கள் தொடர்பான ஆய்வில், பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் 83% தொலைக்காட்சியின் வழியே செய்திகளைப் பார்க்க விரும்புகிறார்கள். எஞ்சியுள்ளவர்கள் முகநூல் 6%, "விஹ்ரிறீவீளீ" ஆர்.டி.எம் செயலி 4%, மற்றும் வலையொளி வழியாக 1% பார்க்கின்றனர் என்பதை இந்தக் கணக்கெடுப்பு காட்டுகின்றது.

### முடிவுரை

கிடைக்கப்பெற்றத் ஆய்வின் அடிப்படியில், ஆர்.டி.எம் தொலைக்காட்சி தமிழ்ச் செய்தி, கோவிட் 19 தொற்று காலத்தில் மலேசிய இந்தியர்களுக்குக் கோவிட் 19 தொற்று தொடர்பான தகவல்களை ஒளிபரப்புச் செய்தது. ஆர்.டி.எம் தொலைக்காட்சி தமிழ்ச் செய்தியானது ஸிஜிவிரிறீவீளீ செயலி, முகநூல் என சமூக வலைத்தளங்கள் வழியாக ஒளிபரப்புச் செய்தாலும், மக்களின் தேர்வு தொலைக்காட்சி தான் என்பதை இந்த ஆய்வு காட்டுகிறது.

நான்காம் தொழில் புரட்சியை மையமாகக் கொண்டு நாடு முன்னேறி வரும் இவ்வேளையில், நாட்டு மக்கள் அதிகம் திறன்பேசிகளைப் பயன்படுத்துவதன் காரணத்தால், ஆர்.டி.எம் செய்திகள் சமூக வலைத்தளங்களிலும் ஒளிபரப்பப்படுகின்றன. இதன் வழி மக்கள் பெரும்பாலான சூழ்நிலைகளில் தேவையான தகவல்களைத் தாங்கள் இருக்கும் இடத்திலேயே பெற்றுக் கொள்ளலாம்.

இருந்த போதிலும், மலேசிய இந்தியர்களில் 83% மேற்பட்டவர்கள் ஆர்.டி.எம் செய்திகளை தொலைக்காட்சி வழியாக மட்டுமே பார்ப்பது விமர்சிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல என்றாலும் சமூக வலைத்தளங்கள் வழி நம்மின மக்கள் தமிழ்ச் செய்திகளைப் பார்ப்பது மிகக் குறைவான எண்ணிக்கையில் உள்ளது. இந்த எண்ணிகை திருப்திகரமானதாக இல்லை.

இந்த நிலை மாற வேண்டும். சமூக வலைத் தலங்களில் ஒளியேற்றப்படும் செய்திகள் இந்திய மக்களைச் சென்றடைய ஆர்.டி.எம் தொலைக்காட்சி நிறுவனம் தகவல் தொடர்பு பல்லூடக அமைச்சோடு இணைந்து சில முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். 'ஸிஜிவிரிறீவீளீ' செயலியை மக்களுக்கு அடிக்கடி அறிமுகப்படுத்துவது, அதனைப் பதிவிறக்கம் செய்யும் முறைகளை மக்களுக்கு அடிக்கடி விளக்குவது, ஆர்.டி.எம் அதிகாரப்பூர்வ முகநூலை இந்தியர்களுக்கு அறிமுகம் செய்வது மட்டும் அல்லாமல், தமிழ்ச் செய்திகளையும் முகநூல் வழி ஒளிபரப்புச் செய்வது போன்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதன் வழி மலேசிய இந்தியர்கள் எந்த ஒரு சூழலிலும், தங்களது திறன் பேசி வழியாகவோ அல்லது கணினி வழியாகவோ ஆர்.டி.எம் தமிழ்ச் செய்திகளைத் தவறாமல் காணலாம்.

## References


Abdullah, M. Q., Hayat, N., & Rahman, A. (2020). The Agenda Setting of Corona: Analysis of the Corona Dissemination Impact on the Community. *Mediator: Jurnal Komunikasi*, *13*(2), 141-155.

Afridi, W. A., Hussain, T., Hashmi, A., & Asghar, R. (2021). The role of mass media in tackling COVID-19 in Pakistan. *Медиаобразование*, (2), 169-176.

Alias, A. (2020). The Impact of Media Infodemics on Covid-19 Outbreak in Intensifying Global Panic Among Malaysians: A Perception-Based Analysis. *Multidisciplinary Approaches in Social Sciences, Islamic & Technology (ICMASIT 2020)*, 36.

Azizuddin, M. N. A., & Abd Hamid, I. J. (9). 9 Fakta Mengenai COVID-19.

Civico, M. A. R. C. O. (2021). *Covid-19 and language barriers*. Working Paper 21: 4. REAL Research Group Economics, policy analysis and language. Ulster University.

Folkerts, Lacy & Larabee, 2008 A4-1) The Media in Your Life: An Introduction to Mass Communication.

Hassan, M. A., Hassan, F., Sabran, R., Abd Ghani, Z., & Rahman, S. H. A. (2015). Producing television programs relevant to all multi-cultural society in Malaysia. *Asian Journal of Applied Communication (AJAC)*.

Hatzikidi, Katerina & Lennox, Corinne & Xanthaki, Alexandra. (2021). Cultural and language rights of minorities and indigenous peoples. The International Journal of Human Rights. 25. 743-751. 10.1080/13642987.2020.1859487.

Karim, A. A., Faizal, S., & Chinnasamy, S. Audiences' *Perception and Engagement with Malaysian Public Broadcaster, Radio Television Malaysia's (RTM) Prime News*.

Kumar, H., Khurana, M. S., Charan, G. S., & Sharma, N. K. (2020). Knowledge and perception of health professionals towards COVID-19. *Age (years)*, *25*(090), 11-5.

McDonnell, D., Wen, J., Kozak, M., Abbas, J., Šegalo, S., ... & Xiang, Y. T. (2021). Mental health consequences of COVID-19 media coverage: the need for effective crisis communication practices. *Globalization and health*, *17*(1), 1-8.

Mohamad, E., Tham, J. S., Ayub, S. H., Hamzah, M. R., Hashim, H., & Azlan, A. A. (2020). Relationship between COVID-19 information sources and attitudes in battling the pandemic among the Malaysian public: cross-sectional survey study. *Journal of medical Internet research*, *22*(11), e23922.

Mohamad, E., Tham, J. S., Ayub, S. H., Hamzah, M. R., Hashim, H., & Azlan, A. A. (2020). Relationship between COVID-19 information sources and attitudes in battling the pandemic among the Malaysian public: cross-sectional survey study. *Journal of medical Internet research*, *22*(11), e23922.

Perumal, T., Sinayah, M., Govaichelvan, K. N., & Shanmuganathan, T. (2022). Communication Strategies of a Malaysian politician in Tamil during the COVID-19 Pandemic. *GEMA Online Journal of Language Studies*, *22*(1).

Plance, D. W. (2018). *Social Media in Emergency Management: A Case Study of Collaboration and Policy* (Doctoral dissertation, Capella University).

Ridzuan, A. R., Luthfia, A., Mohideen, R. S., Allam, S. N. S., Zamri, N. K., Zulkarnain, A., ... & Puspokusumo, R. A. W. (2021, July). The effectiveness of television in creating awareness towards movement control order (MCO) during Covid-19. In *AIP Conference Proceedings* (Vol. 2347, No. 1, p. 020095). AIP Publishing LLC.

Salleh, N., & Ismail, S. (2021, December). Mendepani Covid-19: Muhasabah Dan Mujahadah Diri. In *Proceeding Antasari International Conference* (Vol. 2, No. 1).

Tang, Z., Miller, A. S., Zhou, Z., & Warkentin, M. (2021). Does government social media promote users' information security behavior towards COVID-19 scams? Cultivation effectsand protective motivations. *Government Information Quarterly*, *38*(2), 101572.

Thakur, S., & Chugh, S. (2020). Role Of Indian Tv News Channel Media In Health Communication: Focus Covid–19. *PalArch's Journal of Archaeology of Egypt/ Egyptology*, *17*(6), 4161-4168.

https://covid-19.moh.gov.my

https://www.bbc.com/tamil/global-52082404

https://www.thestar.com.my/news/nation/2022/05/01/mainstream-media-must-continue-to-highlight-danger-of-covid-19-says-annuar

www.who.int/emergencies/diseases/novel-coronavirus-2019/advice-for-public

Jusang Bolong, Akmar Hayati Ahmad Ghazali, Mohd Sobhi Ishak, *"Panduan Penyelidikan Kaedah Komunikasi: Kaedah Kuantitatif"* hlm 128-225, 2018

WHO Interim Guidence, 2020, *https://apps.who.int/iris/bitstream/handle/10665/331215/WHO-2019-nCov*

Kod Etika Penyiaran, *http://www.rtm.gov.my/images/pdf/Kod-Etika-Penyiaran.pdf*

Laman Portal Rasmi RTM*, 2022*